# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1942/13 - 2015 නොවැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2015.11.24

*1942/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 104/44*

**(87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டம்**

114 ஆம் பிரிவின் கீழான கட்டளை

“ஸ்கூல் போர் த ஹியறிங் இம்பெயார்ட் ட்றஸ்ட் ” நம்பிக்கைப் பொறுப்பாளர்களான, அதாவது -

1. திருமதி இறஞ்சிதமலர் பாலசிங்கம்,
2. திரு. அஜித்குமார் சார்ள்ஸ்,
3. திருமதி துஷியந்தி லூயிஸ்,
4. திரு. சீனித்தம்பி ஜோன் தேவதாஸ்,
5. திரு. சின்னத்துரை வரதசீலன்,
6. திருமதி மேரி மதில்டாகிறிஸ்டி

ஆகியோர், (87 ஆம் அத்தியாயமான) நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 114 ஆம் பிரிவின் கீழ் அவர்கள் கூட்டிணைக்கப்படுவதற்காக நீதியமைச்சருக்கு விண்ணப்பித்துள்ளனராதலால்,

ஆகவே, இப்பொழுது, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பாளர்களைக் கூட்டிணைப்பதற்கு இக்கட்டளை மூலம் அதிகாரமளிக்கின்றேன் என்பதுடன், பின்வருமாறு பணித்து வெளிப்படுத்துகின்றேன் :-

(அ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பின் விதிகளின் கீழும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு க. நீலகண்டன் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012, ஏப்பிறல் மாதம் 2 ஆந் திகதிய 2052 ஆம் இலக்கத்தைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகையின் கீழும் அப்போதைக்கு முறையாக நியமிக்கப்பட்ட மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் அவர்களின் அடுத்துறுபவர்களும் “ஸ்கூல் போர் த ஹியறிங் இம்பெயார்ட் ட்றஸ்ட்” என்ற பெயர் மகுடத்தின் கீழ் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்றும் ;

(ஆ) சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயர் மகுடத்தின் கீழ், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புச் சார்பில், அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம், பெறலாம், வைத்திருக்கலாம், கடனாக எடுக்கலாம் அல்லது வேறுவகையாக கொள்ளலாம், விற்பனை செய்யலாம், கொடுத்துமாற்றலாம், ஈடுவைக்கலாம், அடைமானம் வைக்கலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறுவகையாகக் கையுதிர்க்கலாம் என்றும்; அத்துடன்

(இ) நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், சொல்லப்பட்ட பெயரினாலும் மகுடத்தினாலும், சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புத் தொடர்பாக எழுகின்ற எல்லா வழக்குகளிலும் வழக்கு நடவடிக்கைகளிலும் இலங்கையிலுள்ள அல்லது வேறெங்கேனும் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கும் வழக்குத் தொடுக்கப்படுவதற்கும், விடையளிப்பதற்கும் விடையளிக்கப்படுவதற்கும், எதிர்வாதிடுவதற்கும் எதிர்வாதிடப்படுவதற்கும் சட்டத்தில் இயன்றவர்களாகவும் தகுதிவாய்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டுமென்றும்.

இக்கட்டளையானது இல்லாதொழிக்கப்படலாம், அல்லது அவசியமானதென எனக்குத் தோன்றக்கூடியவாறான அத்தகைய முறையில் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

விஜயதாச ராஜபக்ஷ,
நீதி அமைச்சர்.

கொழும்பு,
2015, நவெம்பர் 06.

12- 354

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.